# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 68/2016 | **CNR No.** | **:** | TNKI13-000713-2016 |
| **Name** | **:** | தனபதி | **Father's Name** | **:** | சின்னதம்பி |
| **Witness for** | **:** | Plaintiff | **Calling** | **:** | PW1 |
| **Age** | **:** | 50 | **Village** | **:** | ஒட்டம்பட்டி |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 11:40AM | **End Time** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 06.02.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

(1) வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்.63 எனது அப்பா எனக்கு பாகம் கொடுத்த சொத்து எனது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த வருடம் பாகம் கொடுத்தார்கள் என்றால் தெரியாது. சர்வே எண்.63 என்பது மொத்தம் எத்தனை ஏக்கர் என்றால் 3.90 ஏக்கர் அல்லது 3.15 என்று நினைக்கிறேன். **சர்வே எண்.63/1, 63/2, 63/3** ஆகிய சொத்துக்களின் விஸ்த்தீரண அளவு என்னவென்றால் எனக்கு தெரியாது. **சர்வே எண்.63/3** ல் எதாவது உட்பிரிவு செய்துள்ளார்களா என்றால் இல்லை. சர்வே எண்.63/3 னை எந்த வருடம் உட்பிரிவு செய்தார்கள் என்பது தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.63/3 ஆதியில் யார் உடையது என்றால் எனது அப்பா சின்னதம்பி பாத்தியப்பட்ட சொத்தாகும். அதற்கு முன்பு யாருக்கு

பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. சின்னதம்பி கிரையமாக பெற்றாரா என்றால் இல்லை அது அவரது பூர்விக சொத்தாகும், அது அவரது அப்பா ஜெல்லை கவுண்டர் என்று எனது அப்பா சொல்லியுள்ளார். சின்னதம்பி கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் நான் மற்றும் கோவிந்தாமி ஆகியோர் ஆவோம். பெண் பிள்ளைகள் யாரும் இல்லை. புஷ்பா என்பவர் யார் என்றால் எனது மனைவி ஆவார். சர்வே எண்.63/3 ல் கோவிந்தசாமிக்கு எவ்வளவு பாகம் என்றால் 1 ஏக்கர் 48 செண்ட் ஆகும். எனக்கு எவ்வளவு பாகம் என்றால் 1 ஏக்கர் 65 செண்ட் இருக்கும். சாட்சி தற்போது சர்வே எண்.63 எனக்கு 1 ஏக்கர் 63 செண்ட் பாகம் என்று கூறுகிறார்.

(2) கோவிந்தசாமிக்கும் எனக்கும் பாகப் பிரிவினை ஏற்பட்டதா என்றால் இல்லை. பாகப்பிரிவினை இல்லை என்று சொல்லும் நிலையில் எவ்வாறு எனக்கு 1 ஏக்கர் 63 செண்ட் என்று சொல்கிறேன் என்றால் கோவிந்தசாமி கிரையம் செய்யும் பொழுது அளந்து 1 ஏக்கர் 48 செண்ட் விற்பனை செய்தார். அப்போது எனது பாகம் அளக்கப்பட்டதா என்றால் இல்லை. யூடீஆர் பட்டா வழங்கப்பட்டபோது நில அளவை செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது. யூடிஆர் பட்டா யார் பெயரில் வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சர்வே எண்.63 உட்விரிவு ஆன விவரம் சொல்லியுள்ளேனா என்றால் உட்பிரிவு ஆகவில்லை அதனால் நான் எதுவும் சொல்லவில்லை.

(3) சர்வே எண்.63/3 ஏ எவ்வளவு விஸ்த்தீர்ணம் என்றால் சர்வே எண்.63/3 ஏ என்று ஒரு சர்வே என்னே கிடையாது. சர்வே எண்.63/3 பி எவ்வளவு விஸ்த்தீரணம் என்றால் சர்வே எண்.63/3 பி என்று சர்வே எண்

கிடையாது. இன்றைய தேதியில் சர்வே எண்.63/3 எதாவது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாலுக்கா அலுவலகத்தில் நான் எப்போது மனு செய்தேன் என்றால் 2015 வருடம் மனு செய்தேன். அப்போது ஏற்கனவே சர்வே எண்.63 பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லி தெரிந்துக்கொண்டேன்.

(4) 1998 ல் வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் 58 சென்ட் நிலம் கோவிந்தசாமியிடம் இருந்து வாங்கிய போது நிலத்தை அளவு செய்தேனா என்றால் செய்தேன். வா.சா.ஆ.2 சொத்தின் செக்குபந்தி என்னவென்றால் கிழக்கில் கோவிந்தசாமி நிலம், மேற்கு நடேசன் நிலம், வடக்கு எனது நிலம், தெற்கு குழந்தை நிலம் ஆகும். தெற்கில் உள்ள குழந்தை நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி 58 சென்ட் நிலம் எத்தனை தாக்குகளாக கொடுக்கப்பட்டது என்றால் 2 தாக்குகளாக கொடுக்கப்பட்டது. இரண்டு தாக்குகளுக்கும் குழந்தை நிலம் தான் செக்குபந்தி என்றால் ஆமாம்.

(5) **90 சென்ட் வா.சா.ஆ.3** மூலம் எப்போது வாங்கினேன் என்றால் 2002 ம் ஆண்டு வாங்கினேன். அப்போது நில அளவு செய்தேனா என்றால் செய்தேன். மேற்படி 90 சென்ட் நிலத்திற்கு செக்குபந்தி விவரம் என்னவென்றால் மேற்கு குழந்தை நிலம், கிழக்கு முனுசாமி நிலம், தெற்கு குழந்தை நிலம், வடக்கில் காடு உள்ளது. வா.சாஆ.2 மற்றும் 3 ஆவணங்களில் குழந்தை நிலம் என செக்குபந்தி காட்டப்பட்டுள்ளது சர்வே எண்.63/3 குழந்தை பெயரில் உட்பிரிவு ஆகி அவர் அனுபவித்து வரும் நிலத்தை தான் காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து யூடிஆர் காலத்திலேயே அவர் அவர் பாத்தியம் மற்றும் அனுபவத்தை

அனுசரித்து  சர்வே எண்.63/3 ஏ மற்றும்  சர்வே எண்.63/3 பி என்று உட்பிரிவு ஆகி பட்டா எண் 100 என சின்னதம்பி பெயரிலும் பட்டா எண் 36 என வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பொய்யாகும். 1998 மற்றும் 2002 ம் ஆண்டு கிரையம் கொடுக்கும் பொழுதே எனக்கு மேற்படி விவரங்கள் தெரியும் என்றும் அதனால் தான் செக்குபந்தி குறிப்பிட்டு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 15.06.1987 தேதியிலேயே சர்வே எண்.63/3 என உட்பிரிவு என்பது  சர்வே எண்.63/3 ஏ, மற்றும்  சர்வே எண்.63/3 பி என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

(6) நான் கிரையம் வாங்கி நிலங்கள்  சர்வே எண்.63/3 ஏ என்று என் பேரிலும் என் மனைவி புஷ்பா பேரிலும் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.5 நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திலேயே  சர்வே எண்.63/3 ஏ என்று உட்பிரிவு ஆகியுள்ள பட்டாவை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தான் தாக்கல் செய்த வா.சா.ஆ.6 புல வரைபடத்தியேலே உட்விரிவு ஆன விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சாட்சி வா.சா.ஆ. 5, மற்றும் 6 பார்த்துவிட்டு நான் தாக்கல் செய்யவில்லை என்று சாட்சியளிக்கிறார் வா.சா.ஆ.12 கந்தாய ரசீதுகள் அனைத்தும் பட்டா எண்.100 ல் உள்ள  சர்வே எண்.63/3 ஏ விற்குரிய கந்தாய ரசீதுகள் என்றால் சரியல்ல, அது  சர்வே எண்.63 க்கானது. கந்தாய ரசீதுகள் எவ்வளவு பரப்பளவு நிலத்திற்கு கட்டப்பட்டுள்ளது என்றால் 3 ஏக்கர் 15 சென்ட்க்கானது. எனது அப்பா சின்னதம்பியும் 1ம் பிரதிவாதி குழந்தை கவுண்டரும் சகோதரர்கள் என்றால் சரிதான்.

(7) ஜெல்லை கவுண்டர் உயிருடன் இருக்கும் பொழுதே சர்வே எண்.63/3 ல் குழந்தைக்கு 24 செண்ட் பாகமாக கொடுத்தார் என்றும் மேற்படி பாக நிலத்தில் அவர் அனுபவித்து வந்து அதன் அடிப்படையில் சர்வே எண்.63/3 பி என உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா எண்.36 வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. யூடிஆர் திட்டத்திலேயே சின்னதம்பி மற்றும் குழந்தை கவுண்டர் ஆகியோர் பாக நிலங்களுக்கு உட்பிரிவுகள் செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(8) 1998 ல் கிரைய ஆவணம் மற்றும் 2002 ம் ஆண்டு கிரைய ஆவணம் எழுதுவதற்கு முன்பே சர்வே எண்.63/3, சர்வே எண்.63/3 ஏ,பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விவரத்தை குறிப்பிடாமல் கிரைய ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்துள்ள சமயத்தில் வழக்குரையில் செக்குபந்தி விவரம் சொல்லியுள்ளேனா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்துள்ள சமயத்திலேயே சர்வே எண்.63/3 ஏ மற்றும் 3 பி மற்றும் விஸ்த்தீரணம் செக்குபந்தி குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. நான் சொல்லும் 24 செண்ட் நிலம் ஒரு போதும் எனது தந்தையோ, நானோ ஒரு காலத்திலும் அனுபவித்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் நான் செக்குபந்தி விவரம் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

(9) நான் தாக்கல் செய்த **வா.சா.ஆ.13** புலவரைபடம் உட்பிரிவு செய்வதற்கு முன்பு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. **வா.சா.ஆ.13** யூடிஆர்க்கு முன்பு வழங்கபட்டது என்றால் சரியல்ல. **வா.சா.ஆ.6** யூடிஆர்க்கு பிறகு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல, வா.சா.ஆ.13 யூடீஆர்க்கு பிறகு வழங்கப்பட்டதாகும். வா.சா.ஆ.14 மோசடியாக

தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13,14,15 ஆவணங்கள் 2000 ம் ஆண்டு வாங்கப்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. யூடிஆர் திட்டத்தில் வழங்கப்பட்ட பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை நிலை தெரிந்துவிடும் என்று சொன்னால் சரியல்ல. **சர்வே எண்.63/3, சர்வே எண்.63/3 ஏ, சர்வே எண்.63/3 பி** ஆகிய நிலங்கள் எங்களது நிலம் இல்லை, **சர்வே எண்.63** என்பது தான் எங்களது நிலமாகும்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

G AMAR ANAND
District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai